

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி 172 அ வட்டத்தில் தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் விழா மற்றும் வட்டச் செயலாளர் எஸ்.ஆர். செந்திலின் தாயார் எஸ். ஆர். ராஜகுமாரி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளையொட்டி, நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் – மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் புத்தாடைகளை வழங்கினார். உடன் பகுதி கழகச் செயலாளர் இரா. துரைராஜ் எம்.சி., இ.முருகேசன், நேருநகர் எஸ். பாஸ்ரா, கோட்டூர் மணி, மு.ஆரோக்கியம், மாவட்ட பிரதிநிதி, வி. ரமேஷ்குமார், மடுவை பி. பிரகாஷ், தா.கோ. வெங்கடேசன், ஏ. சக்திவேல், ஆர். சீனிவாசன், எம். நாராயணமூர்த்தி, கே. கே. மோகன், ஜெ. ஜெயராமன், பூ. ஜெயவேல், கோட்டூர் சலாம், சைதை மோசஸ், சைதை சங்கர், இ. சுரேஷ், கே. வி. ஜோய், மடுவை டி. அன்பு, யூ. திருவேங்கடம், சகாதேவன், எஸ். அசோக், இரா. மலர்விழி, எஸ். ராமச்சந்திரன், தமிழ், ஆதிகேசவன், லோகநாதன், இ.பி. திருவேங்கடம், வேலாயுதம், கன்னிகாபுரம் ரா. ராஜி, திலீப், தாமோதரன், ஸ்ரீதர், காமராஜபுரம் மாரிமுத்து, சேகர், சரவணன், ரஜினி, சோமு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



குன்றத்தூரில் 5,000 க்கும் மேற்பட்ட கழகத்தினர் மற்றும் பொதுமக்களுக்கு கருப்பு சிவப்பு வேட்டி, சேலை, நாள்காட்டி ஆகியவற்றை பொங்கல் பரிசாக காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளரும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் குன்றத்தூர் நகர மன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## தலைமை: தி.மு.தனியரசு! கோ.ரமேஷ் ஏற்பாடு!

# திருவொற்றியூர் கிழக்கு 9வது வட்டத்தில் கல்வெட்டு திறப்பு - நல உதவிகள்!

## ஆர்.எஸ்.பாரதி – மாதவரம் எஸ்.சுதர்சனம் – ஆரம்பாக்கம் ஆறுமுகம் வழங்கினர்!

சென்னை,ஜன.17-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 9வது வட்டம், பகுதி தொண்டர் அணி சார்பில், அமைப்பாளர் கோ.ரமேஷ் ஏற்பாட்டில் கழக கொடி ஏற்றி, கல்வெட்டு திறப்பு விழா மற்றும் 500பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, 12.1.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10மணியளவில், உடையார் மாளிகை கிராமத் தெரு சந்திப்பு நடைபெற்றது.

இதில் எம்.எல்.சரவணன் 9வது வட்ட கழக செயலாளர், எஸ்.உமா.சரவணன் எம்.சி., 9வது வட்ட கழக நிர்வாகிகள் : செங்குட்டுவன், கௌசல்யா, ஜெய்சங்கர், ஜெயக்குமார் ராஜா, சீனி கண்ணன், ஸ்ரீதர், பிரகாஷ்,அமுதன், சுரேஷ் வரவேற்றனர்.

திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர், 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு தலைமை வகித்தார்.

மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் ஆர்.சி.ஆசைத்தம்பி கிழக்கு பகுதி அவைத்தலைவர், எம்.வீ.குமார் கிழக்கு பகுதி துணை செயலாளர், கே.பிரபாவதி கிழக்கு பகுதி துணை செயலாளர், இரா.குமரேசன் கிழக்கு பகுதி பொருளாளர், எஸ்.கண்ணையன் 9வது வட்ட அவைத்தலைவர், எல்.கண்ணப்பன் முன்னாள் பகுதி பிரதிநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழகக் கொடியேற்றி கல்வெட்டை திறந்து வைத்தார். சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., ஆரம்பாக்கம் கே. ஆறுமுகம் திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இதில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள், த.கார்த்திகேயன், டி.சி. வி.மணிகண்டன், எஸ். தமிழ்செல்வன், குறுத்து சி.முனுசாமி, கவீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம். ராஜா, ஆர்.சந்தர், ஏகா. கார்த்திகேயன்

மாவட்ட பிரதிநிதிகள்: எஸ்.பாஸ்கர், ஓய் நந்திவர்மன், ஆர்.ரஜினி பாபு, டி டி எம் பாபு, ஆர்.டில்லி, ம.ஜெயராமன், வி.பழனிவேல், பி.எஸ்.சைலஸ் ஆர். தினேஷ்குமார் மற்றும் அனைத்து வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி வட்ட அணிகளின் நிர்வாகிகள் பாக முகவர்கள் BLA 2 BLC, கழகத் தோழர்கள் கழக மூத்த முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணி!

# நாள்தோறும் 5,900 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றம்!

சென்னை,ஜன.17-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு, நாள்தோறும் 5,900 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தூய்மையாகவும், சுகாதாரமாகவும் திகழ்ந்திடும் வகையில் அனைத்து போக்குவரத்து மற்றும் உட்புறச் சாலைகள், பேருந்து நிறுத்தங்கள், பூங்காக்கள், மயானபூமிகள், மேம்பாலங்கள், மேம்பாலங்களின் கீழ் உள்ள பகுதிகள் மற்றும் சுரங்கப்பாதைகளில் தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குப்பைகள், கட்டடக் கழிவுகள், சுவரொட்டிகள் மற்றும் அனுமதியின்றி வைக்கப்பட்ட விளம்பரப் பதாகைகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தண்டையார்பேட்டை, இராயபுரம், திரு.வி.க. நகர், அண்ணாநகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் மற்றும் அடையாறு ஆகிய 7 மண்டலங்கள் முழுவதும் சாலைகள் மற்றும் தெருக்களில் உள்ள கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை 59 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களைக் கொண்டு தீவிரமாக கட்டடக் கழிவுகளை அகற்றும் தூய்மைப் பணியானது மாண்புமிகு மேயர்

திருமதி ஆர்.பிரியா அவர்களால் 07.01.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், 07.01.2025 முதல் 13.01.2025 வரை தண்டையார்பேட்டை மண்டலத்தில் 815 மெட்ரிக் டன், இராயபுரம் மண்டலத்தில் 695.95 மெட்ரிக் டன், திரு.வி.க.நகர் மண்டலத்தில் 618.42 மெட்ரிக் டன், அண்ணாநகர் மண்டலத்தில் 746.81 மெட்ரிக் டன், தேனாம்பேட்டை மண்டலத்தில் 883.17 மெட்ரிக் டன், கோடம்பாக்கம் மண்டலத்தில் 732.35 மெட்ரிக் டன் மற்றும் அடையாறு மண்டலத்தில் 831.72 மெட்ரிக் டன் என மொத்தம் 5,323.42 மெட்ரிக் டன் கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது. இந்தக் கழிவுகள் அந்தந்த மண்டலங்களில் நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் சேகரித்து வைக்கப்பட்டு, பின்னர் பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது. மேலும், இந்தத் தீவிரத் தூய்மைப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக, மீதமுள்ள திருவொற்றியூர், மணலி, மாதவரம், அம்பத்தூர், வளசரவாக்கம், ஆலந்தூர், பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய 8 மண்டலங்களில் இன்று (17.01.2025) முதல் தீவிரமாக கட்டடக் கழிவுகள் அகற்றும் தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட்டு, கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றப்படவுள்ளது.

எனவே, பொதுமக்கள் மாநகராட்சியின் சார்பில் மேற்கொள்ளப்படும் தூய்மைப் பணி நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி, திடக்கழிவுகளை பொது இடங்களில் கொட்டுவதைத் தவிர்த்து, அதற்கென வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளில் மட்டுமே கொட்டிட வேண்டும். மேலும், கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை பொது இடங்களில் கொட்டுவதைத் தவிர்த்து, அதற்காக மாநகராட்சியின் சார்பில் நிர்ணயம் செய்யப்பட்ட 15 மண்டலங்களிலும் உள்ள இடங்களில் மட்டுமே கட்டடக் கழிவுகளை கொட்டிட கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# காரைக்குடியில் சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம்!


## அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, ஜன. 17 -

சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம். இன் று17ம்தேதி காரைக்குடியில் நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட கழக செயலாளரும் , கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

இன்று (17.01.2025 - வெள்ளிக்கிழமை) சிவகங்கை மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் காரைக்குடியில் தலைவர் கலைஞர் பவளவிழா மாளிகையில் பசும்பொன் தா.கிருட்டிணன் அரங்கத்தில் காலை 10.00 மணி அளவில் நடைபெறுகிறது.



மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் கூட்டம் நடைபெறுகிறது.

எனவே இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு , பொதுக்குழு உறுப்பினர்கள் , ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு. அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூட்டத்தில் விவாதிக்கும் பொருட்கள்.

1.தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் தளபதி அவர்கள் 21,22ஆகிய தேதிகளில் சிவகங்கை மாவட்டத்திற்கு வருகைதருவது வரவேற்பு குறித்து.

2. கழக வளர்ச்சி பணிகள்.

இத்தகவலை மாவட்ட கழகச் செயலாளரும், அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் தெரிவித்து உள்ளார்.

# திருவலங்காடு கிழக்கு ஒன்றியத்தில் பொங்கல் விழா!

திருவள்ளூர், ஜன. 17-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம்திருவலாங்காடு கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை விழா மற்றும் தமிழர் திருநாள் தைப்பொங்கலை முன்னிட்டு குதிரை வெள்ளோட்டம் நிகழ்ச்சி ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.மகாலிங்கம் தலைமையில் முன்னாள் மாவட்ட பிரதிநிதி திருவள்ளூர் மாவட்ட ரேக்ளா குதிரைகளின் உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் நல சங்கம் தலைவர் பி.நந்தகுமார் ஏற்பாட்டில் திருவாலங்காட்டில் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு போட்டியை துவக்கி வைத்து அணிகளுக்கு பரிசு தொகை கோப்பை வழங்கினார்கள்.

உடன் ஒன்றிய கழகச் செயலாளர் கூளூர் எம்.ராஜேந்திரன், மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெயபாரதி, ப.சிட்டிபாபு, பொன். பாண்டியன், காளம்பாக்கம் எம்.பன்னீர் செல்வம், டி.மோதிலால், ஒன்றிய நிர்வாகிகள் எஸ்.சண்முகம், தி.நந்தகுமார், கே.குமார், செல்வம், ஹரிபாபு, காஞ்சிபடி சரவணன், நீலாவதி சீனிவாசன், த.தினகரன், ஏ.பி.செந்தில் குமார், வழக்கறிஞர் ஆர்.ராஜா, கே.ஜி. ஆர்.ராஜேஷ் குமார், முனிகிருஷ்ணன், துரைகோபு, ஞானமூர்த்தி, ஜெ.கலைவாணன், வெங்கட்டம்மா, அத்திப்பட்டு செல்வம் சிவகுமார், எம்.சதீஷ், உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை தென் மேற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் தலைமையில் பொங்கல் விழா நலத்திட்டம் உதவி மற்றும் இலக்கியஅணி நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கும் நிகழ்ச்சி தேனாம்பேட்டையில் உள்ள சமூக நல கூடத்தில் நடைபெற்றது. சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. கலந்து கொண்டு நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு, நலத்திட்ட உதவி வழங்கினார். மேலும் St. ரபேல் பள்ளி தமிழ் ஆசிரியர் ச.மேரிக்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் 2024 ஆண்டிற்கான தமிழ் செம்மல் விருது வழங்கி பாராட்டினார். பகுதி செயலாளர்கள் நந்தனம் கி.மதி, எஸ் முரளி மற்றும் 122 வது வட்ட செயலாளர் எஸ்.ஆர்.ராஜா சுரேஷ் முன்னிலை வகித்தனர். மாவட்ட இலக்கிய அணி தலைவர் சா.தேவராசு, துணை தலைவர் கே பாலகிருஷ்ணன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் அயன் ரா.ரமேஷ், இரா.சதாசிவம், எம்.எ.எஸ். செந்தில்குமார், ஆர்.வரதராஜன் வரவேற்றனர். இந்நிகழ்ச்சியில் மயிலை மேற்கு பகுதி இலக்கிய அணி தலைவர் பி.எஸ்.ஆறுமுகம், மயிலை கிழக்கு பகுதி தலைவர் டில்லி, தியாகராயர் நகர் மேற்கு பகுதி அமைப்பாளர் யூ.ராம்பாபு, மயிலை மேற்கு பகுதி அவை தலைவர் ஜி.ஆர்.ராஜேந்திரன் மற்றும் மயிலை மேற்கு, கிழக்கு பகுதி துணை அமைப்பாளர்கள் கே.ஆர்.குமார், டி.பிரபாகரன், க.திருவேங்கடம், எஸ்.ராஜேந்திரன், சி.கே.அறிவு மணி, வே. கந்தஸ்வாமி, பி.ஏழுமலை, இ.ராஜேஷ் , இந்திரகுமார், அணு, தியாகராயர் நகர் கிழக்கு மேற்கு பகுதி அமைப்பாளர்கள் தணிகைமலை , தமிழ் வெங்கடேசன், CRPK சுரேஷ், டி.முனிவேல், எம்.சுகுமாரன், தா. ஸ்ரீனிவாசன், 122 அ வட்ட செயலாளர் நாகராஜ், மூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர். மயிலை மேற்கு பகுதி அமைப்பாளர் கா.கணபதி, மயிலை கிழக்கு பகுதி அமைப்பாளர் சு மோகன் நன்றி கூறினார்கள்.



துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கே.எல்.என்.லெனின் குமார் ஏற்பாட்டில் மாபெரும் மாவட்ட அளவிலான நடைபெற்ற ஒரு நாள் கிரிக்கெட் போட்டியினை சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் பரிசு வழங்கினார். இந்நிகழ்வில் விப்ரோ நாராயணன், அருள்தேவநேசன், கே.கபிலன் எம்.சி., ஆர்.டி.குமார், இ.பாஸ்கர், ஆர்.டி.சுரேந்திரன், திராவிட மணி, இளங்கோவன், எஸ்.அன்பு, ஆர்.எம்.பி.குமார், இ.சுகுமார், ஆர்.கே.சுரேஷ், அப்துல்சமது, வடிவேல், நாகராஜ், வி.மதிவாணன், ஜி.நாகராஜ் வழக்கறிஞர் ஆர்.டி.சுதாகர், ஏழுமலை, ஆம்.பிரேம்குமார், து.சாந்தகுமார், அருள்ராஜ், முனுசாமி, ஜேம்ஸ், டி.ராமகமல், சீனிவாசன், சங்கர், மு.ஈஸ்வரன், ஹாம் கார்த்திக், கருப்பு ஸ்ரீதர், வாசு, அறிவுநிதி, பிராசாத், கார்த்திக் ஜோதி, நவின், கிருஷ்ணகுமார், சிக்கந்தர், ரவீந்தர், பிரபாகரன், நிர்மல்ராஜ், பார்த்திபன், ரமணன், அரிபாபு, கே.யுவராஜ், டேவிட், சோழவரம் எம்.எஸ்.மணிகண்டன், ஐயப்பன், ம.குறளரசன், எர்ணாவூர் சிவசூரியா, எஸ்.ஹரிஷ், ஆர். ரூபேஷ், ஜி.ஹரி, டி.ஜென்னிஸ், எம்.கவின், ஆர்.மோகன், சி.பால்ராஜ், வி.சஞ்ஜெய், சி.ஜெகன் மற்றும் கழக உடன் பிறப்புக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கீழ்ச்சேரி பகுதியில் உள்ளன கிறைஸ்ட் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் டாக்டர் வி.சி.ஆர்.குமரன் கலந்து கொண்டு சமத்துவ பொங்கல் விழாவை துவக்கி வைத்து கலை நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்துக்கள் கூறினார். உடன் கல்லூரி தாளாளர் கல்லூரி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## பொங்கல் விடுமுறையை முன்னிட்டு

# குற்றாலத்தில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர்!

தென்காசி,ஜன.17-

குற்றாலத்தில் பொங்கல் விடுமுறை தினத்தை முன்னிட்டு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து காணப்பட்டது. மூன்று தினங்களாக அவ்வப்போது தூறல் விழுவதால் அருவிகளில் தண்ணீர் வரத்தும் நன்றாக உள்ளது. தமிழகம் முழுவதும் இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அரசு அலுவலகங்களுக்கு ஆறு நாட்கள் விடுமுறை கிடைத்துள்ளது. இந்த விடுமுறை காரணமாக பள்ளி மாணவ மாணவிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் பல்வேறு சுற்றுலா தலங்களுக்கு சென்று வருகின்றனர். அந்த வகையில் குற்றாலத்திற்கும் சுற்றுலா பயணிகள் வருகை நேற்று அதிகரித்து காணப்பட்டது. ஏற்கனவே கடந்த மூன்று தினங்களாக குற்றாலம் பகுதியில் இதமான சூழல் நிலவுகிறது.

இதமான சூழல் மற்றும் தூறல் காரணமாக அருவிகளில் தண்ணீர் வரத்தும் சிறிதளவு அதிகரித்துள்ளது. மெயின் அருவியில் ஆண்கள் மற்றும் பெண்கள் பகுதியில் ஓரளவு நன்றாக தண்ணீர் வருகிறது.



திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு தியாகராயர் நகர் 141 வது வட்டம் காமராஜர் காலனியில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு தியகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதனை தொடர்ந்து அங்கு திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தியாகராயர் நகர் மேற்கு பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, 141 வது வட்டச் செயலாளர் லலிதாபுரம் என்.துரை, 133 வது (அ) வட்டச் செயலாளர் பி.மாரி, 141 வது வட்ட துணைச் செயலாளர்கள் வீ.பழனிசாமி, மகேஸ்வரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்